**தலைப்பு 252 – தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 252 – தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 01 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,287.24 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,036.04 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 251.20 மில்லியன் அதாவது 19.51 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 812.25 | 805.38 | 6.87 | 0.88 |
| மூலதனம் | 474.99 | 230.66 | 244.33 | 51.44 |
| மொத்தம் | **1,287.24** | **1,036.04** | **251.20** | 19.51 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 25201 ஆம் விடய இலக்கத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 51.76 | 44.71 | 31.76 | 35.45 | 220.00 | 146.05 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0037/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 4.96 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 03 பொது வைப்பு கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 32.83 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பொது வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0060/000 | 0.10 |
| 6000/0000/00/0016/0036/000 | 32.24 |
| 6000/0000/00/0018/0023/000 | 0.49 |
| மொத்தம் | 32.83 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 712,337 ஆக இருந்ததுடன், அம்மீதிகள் ஆண்டு 1 முதல் 24 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்தபோதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு மற்றும் 10 பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையின் 2(iii) ஆவது நிபந்தனை | நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக அங்கீகரிக்கப்பட்டு வெளிநாட்டு விடுமுறை முடிவடைந்திருந்த 05 உத்தியோகத்தர்கள் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. |
| (ii) XII ஆம் அத்தியாயத்தின் 16.5 ஆம் பிரிவு மற்றும் 10 பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையின் 2(iv) ஆவது நிபந்தனை | வெளிநாடு சென்று சேவைக்கு அறிக்கையிடாதிருந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,251,600 ஆன தண்டப் பணமொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.3 தேசிய நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்தல்

திணைக்களத்தின் புதிய அலுவலக கட்டிட நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 நவம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் ரூபா 727,529,015 (வரியில்லாமல்) கிரயத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 மார்ச் 05 ஆந் திகதி தனியார் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 ஜனவரி 30 ஆந் திகதி அளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 02 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கால நீடிப்பின் பிரகாரம் அத்திகதி 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2015 ஜனவரி மாதத்தின் போது திணைக்களத்திற்கு புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கட்டிடம் திணைக்களத்தினால் முறையாக கையேற்கப்படாதிருந்ததால் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டிய திகதி குறிப்பாக வெளிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஆ) உடன்படிக்கை பிரகாரம் செலுத்த வேண்டிய கிரயம் ரூபா 727,529,015 ஆக இருந்த போதிலும், 29 சந்தர்ப்பங்களில் ரூபா 832,133,569 ஆன கூட்டுத்தொகை 2014 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 4,524,799 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 138,926,105 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக் கிரயத்தின் பாதக முரண் ரூபா 248,455,458 அதாவது 34.1 சதவீதமாக இருந்தது.

(இ) கட்டிடத்தைப் பயன்படுத்தும் போது மின்சார முறைமைக்கும் மின் உயர்த்திக்கும் மழை நீர் கசிதல், கீழ் மாடியில் நீர் நிறைதல் போன்ற குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டது.

**3.4 செயலாற்றல்**

---------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 இன் நான்காவது காலாண்டு இறுதி வரையிலும் 2012 இன் குடிசன தொகை மதிப்பு அறிக்கை ஒட்டுமொத்த இலங்கையையும் மேவும் வகையில் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தப்பணி உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014/2015 சமூக விஞ்ஞானம் மற்றும் சுகாதார மெய்மையாய்வின் கணிப்பீட்டுப் பணிகளை பூர்த்தி செய்து இறுதி அறிக்கையை பிரசித்தப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இறுதி அறிக்கை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 வருடாந்த கைத்தொழில் கணிப்பீட்டு அறிக்கை 2015 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டு இறுதியில் வெளிக்கள நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வீடுகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான விசேட கணிப்பீட்டிற்காக ரூபா 7,285,650 தொகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கணிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வீடுகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான விசேட கணிப்பீடு 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அதனை நடாத்தாமல் 2016 ஆம் ஆண்டின் போது வீட்டு அலகொன்றின் வருமானம் மற்றும் செலவினக் கணிப்பீட்டை மேற்கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் போது அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் அதாவது வினாக்கொத்துக்களைத் தயாரித்தல், அச்சிடல், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி என்பவற்றை பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்திருந்ததாக பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) பொருளாதார கணிப்பீட்டிற்குரிய விவசாய செயற்பாடுகள் தொடர்பான மதிப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

---------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 282 | 175 | 107 |
| (ii) | மூன்றாம் நிலை | 529 | 350 | 179 |
| (iii) | இரண்டாம் நிலை | 786 | 684 | 102 |
| (iv) | ஆரம்ப நிலை | 176 | 151 | 25 |
| (v) | ஏனையவை (பட்டதாரி பயிலுனர்கள்) | 03 | 01 | 02 |
| | மொத்தம் | 1,776 | 1,361 | 415 |